அழகைப் போற்றுவோம்

# புலிகளின் இடத்தை பேணிக் காப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூலை 30-

உலக புலிகள் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், புலிகளின் இடத்தை பேணிக்காத்து அவற்றின் அழகைப் போற்றுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகப்புலிகள் நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள செய்தி வருமாறு :-

**உலகப்புலிகள் நாளில், சிறப்புமிகு உயிரினமான நம் புலிகளின் பாதுகாப்புக்காகக் குரல் கொடுப்போம்! அருகி வரும் உயிரினமான புலிகளைக் காப்பதற்கான தமிழ்நாடு அரசின் உறுதியான முயற்சிகள் மிகச்சிறந்த முடிவுகளை அளித்துள்ளது. 2018ஆம் ஆண்டில் 264 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2022இல் 306 ஆக உயர்ந்துள்ளது. நாம் அனைவரும் இணைந்து கானகத்தில் புலிகளின் இடத்தைப் பேணிக்காத்து, அவற்றின் அழகைப் போற்றுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## பாகிஸ்தானில் வேன் விபத்து!

*இஸ்லாமாபாத், ஜூலை 30*

பாகிஸ்தான் கில்கிட் பலுஸ்திஸ்தான் பகுதியில் சுற்றுலா மாகாணத்தில் பயணிகளை ஏற்றிக் கொண்டு ஒரு வேன் சென்று கொண்டு இருந்தது. இந்த வேனில் 16 பேர் பயணம் செய்தனர்.

டைமர் மாவட்டம் பாசார்பாஸ் என்ற பகுதியில் சென்ற போது அந்த வேன் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது. பின்னர் அந்த வேன் பள்ளத்தில் கவிழ்ந்தது. இதனால் வேனில் சென்ற பயணிகள் உயிர் பயத்தில் அலறினார்கள். பள்ளத்தில் விழுந்த வேகத்தில் வேன் தீப்பிடித்து எரிந்தது. இது பற்றி அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே ஒரு குழந்தை உள்பட 8 பேர் இறந்தனர். 4 பெண்கள், 4 குழந்தைகள், மற்றும் ஒரு ஆண் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் பொறையாத்தா கடை தெருவில் வசித்து வரும் 107 வயது நிறைந்த கு. கோபாலகிருஷ்ணன் என்ற ஓய்வூதியர் அவர்களின் இல்லத்திற்கு, நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 27.07.2023 அன்று நேரில் சென்று பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார். உடன், கருவூல கணக்கு துறை ஆணையர் கே.விஜயேந்திர பாண்டியன், மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) ரஞ்சித்சிங், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு தாட்கோ கழக தலைவர் உ.மதிவாணன் நாகப்பட்டினம் சார் ஆட்சியர் பானோத் ருகேந்தர் லால் ஆகியோர் உள்ளனர்.

மணிப்பூர் கலவரம் : நடவடிக்கை எடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் மகளிர் அணியினர் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மகளிர் அணியினர் திரளாகப் பங்கேற்றனர்!

*காஞ்சிபுரம், ஜூலை 30*

மணிப்பூர் மாநிலத்தில் நடைபெற்ற கலவரத்தில் நடவடிக்கை எடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக 6 தொகுதிகளில் மகளிர் அணியினர் சார்பில் நடத்தப்பட்ட மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மகளிர் அணியினர் திரண்டனர்.

மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடியின பெண்களுக்கு எதிராக நடைபெற்ற பாலியல் வன்கொடுமையை கண்டு கொள்ளாமல் நடவடிக்கை எடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக 6 இடங்களில் மகளிர் அணியினர் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆலந்தூர் தொகுதி நங்கநல்லூர் ஸ்டேட் பாங்க் காலனி அண்ணா சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் கழக பொதுக்குழு உறுப்பினர் கீதா ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் மு.பாண்டிசெல்வி, மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கீதா, க.சாந்தி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் க.சுகுணா ஆகியோர் வரவேற்றனர்.

குன்றத்தூர் ஒன்றியக் குழு துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், பகுதி துணை செயலாளர்கள் வி.ராஜேஸ்வரி, எஸ்.ஜெயா, நகர துணைச் செயலாளர் மு.தமிழ்செல்வி, ஒன்றிய துணை செயலாளர் பூங்கொடி அரசு, சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் வி.பாரதி, எஸ்.அமுதப்பிரியா, பிருந்தா ஸ்ரீ, எஸ்.ரேணுகா, ஜெ.பூங்கொடி, ஒய்.தேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திராவிட இயக்க பேச்சாளர் நாஞ்சில் சம்பத் கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கண்டன உரையாற்றினார்.

மகளிரணியினர் எஸ்.பாரதி, சற்குணம், ஏ.அபிபுன்னிஷா, எம்.கலைவாணி, ராசாமணி சகாதேவன், கே.சாந்தி, ஜெ.விக்டோரியா, ஆனந்தி, ஒன்றிய கவுன்சிலர்கள் லோகநாயகி, உஷா நந்தினி எத்திராஜ், அன்னம்மாள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஜமீலா, கௌரி, திவ்யா, உமா, சாந்தா தேவி, இ.அனிதா, ஒய்.விஜயா மற்றும் பகுதி வார்டு கழக ஊராட்சி கிளைக் கழக மகளிர் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திரண்டு கண்டன முழுக்கங்களை எழுப்பினார்கள்.

இறுதியாக மாமன்ற உறுப்பினர் துர்காதேவி நன்றியுரையாற்றினார்.

செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகர் பாவேந்தர் சாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினரும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளருமான வரலட்சுமி மதுசூதனன் தலைமையில் நடைபெற்றது.

செங்கல்பட்டு நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன் வரவேற்புரை ஆற்றினார்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர் செ.அருள்தேவி, மறைமலைநகர் நகர மன்ற துணைத் தலைவர் சித்ரா கமலக்கண்ணன், செங்கல்பட்டு நகர துணைச் செயலாளர் அம்பிகா சேட்டு மாவட்ட மகளிர் அணி துணைச் அமைப்பாளர்கள் மீரா சபாபதி, கே.சி.ஸ்ரீசந்தியா, விஜயலட்சுமி ரமேஷ், மாலா சீனிவாசன், பூங்கோதை ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திராவிட கழக பேச்சாளர் மதிவதனி கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கண்டன உரையாற்றினார்.

இறுதியாக காட்டாங்குளத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் உதயா கருணாகரன், மறைமலைநகர் நகர மகளிர் அணி அமைப்பாளர் வி.இந்திரா ஆகியோர் நன்றியுரை ஆற்றினார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் 5000க்கும் மேற்பட்ட கழக மகளிர் அணியினர் திரண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

தாம்பரம் தொகுதி, காமராஜபுரம் பேருந்து நிலையம் அருகில் தாம்பரம் மாநகர துணைச் செயலாளரும், தாம்பரம் மாநகராட்சி மேயருமான வசந்தகுமாரி கமலக்கண்ணன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சி.பரிமளா அனைவரையும் வரவேற்றார்.

பகுதி துணைச் செயலாளர்கள் கல்யாணி மணிவேல், எஸ்.விமலா, எல்.பேகம், லிங்கேஸ்வரி, சாமுண்டீஸ்வரி, தாம்பரம் மாநகராட்சி கல்விக் குழு தலைவர் கற்பகம் சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் ரமாதேவி, கமலா, இராஜேஸ்வரி, மதுமிதா, சசிகலா, ரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் எஸ்.புகழேந்தி கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கண்டன உரையாற்றினார்.

திருவஞ்சேரி ஊராட்சி மன்றத் தலைவர் ஜனனி, துணைத் தலைவர் ருக்மணி, மதுரப்பக்கம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சாவித்திரி ஒன்றிய துணைச் செயலாளர் மஞ்சு உள்ளிட்ட 5000க்கும் மேற்பட்ட கழக மகளிர் அணியினர் திரண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

இறுதியாக செம்பாக்கம் நகர மகளிர் அணி அமைப்பாளர் மணிமேகலை குமார் நன்றியுரை ஆற்றினார்.

பல்லாவரம் தொகுதி, குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் டி.அமுதா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பம்மல் தெற்கு பகுதி மகளிர் அணி அமைப்பாளர் வி.கே.செல்வி அனைவரையும் வரவேற்றார்.

பகுதி துணைச் செயலாளர்கள் மீனா பாஸ்கர், பி.அம்பிகா, சரஸ்வதி சந்திரசேகர், ஜி.பபிதா, கவிதா பாலசந்தர், எஸ்.ஜெயா, தாம்பரம் மாநகராட்சி கணக்கு குழுத் தலைவர் ஏ.மதினா பேகம், பணிகள் குழு தலைவர் ஜெ.சண்முக சுந்தரி, பொழிச்சலூர் ஊராட்சி மன்றத் தலைவர் வனஜா தயாளன், திரிசூலம் ஊராட்சி மன்றத் தலைவர் உஷா மாரிமுத்து, நகர மகளிர் அணி அமைப்பாளர்கள் ஒய்.பத்ரூநிஷா, எம்.புவனேஸ்வரி, ஆர்.வேளங்கண்ணி, வி.அருள்செல்வி, எஸ்.சகயமேரி ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன் கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கண்டன உரையாற்றினார்.

தாம்பரம் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் கலைவாணி, வாணிஸ்ரீ, சித்ரா, கல்யாணி, ரம்யா, லதா, சத்யா, ரேணுகா தேவி, மங்கையர் திலகம், பிரமலதா, பிருந்தாதேவி, கலைச்செல்வி, கீதா, மகேஸ்வரி, சித்ராதேவி, சங்கீதா, மகாலட்சுமி, சரண்யா, அமுதப்ரியா, ஜாய் செல்வகனி. சௌமியா உள்ளிட்ட 5000க்கும் மேற்பட்ட கழக மகளிர் அணியினர் திரண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

இறுதியாக திருநீர்மலை பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் சத்யவாணி நன்றியுரை ஆற்றினார்.

திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் அம்பேத்கர் சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் செங்கல்பட்டு மாவட்ட குழு துணைத் தலைவர் காயத்திரி அன்புச்செழியன் தலைமையில் நடைபெற்றது.

திருப்போரூர் ஒன்றிய குழு துணைத் தலைவர் சத்யா சேகர் அனைவரையும் வரவேற்றார்.

ஒன்றிய பேரூர் கழக துணைச் செயலாளர்கள் ரா.மகாலட்சுமி, ரா.கல்யாணி, பி.அம்சவள்ளி, கோ.வாணி, ஷே.தௌலத்பீ, தே.சுதா, ஒன்றிய பேரூர் மகளிர் அணி அமைப்பாளர்கள் வெ.சத்யா, எஸ்.சசிகலா, டி.சூரியா, ப.செல்வி, உ.தீபா ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதிக் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கண்டன உரையாற்றினார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் 5000க்கும் மேற்பட்ட கழக மகளிர் அணியினர் திரண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

இறுதியாக திருப்போரூர் பேரூர் மகளிர் அணி அமைப்பாளர் நன்றியுரையாற்றினார்.

திருப்பெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் மலர்விழி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

குன்றத்தூர் நகர் மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி, திருப்பெரும்புதூர் பேரூராட்சி மன்றத் தலைவர் சாந்தி ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்.

குன்றத்தூர் நகர துணைச் செயலாளர் ஆர்.கே.அபிபுன்னிசா, மாங்காடு சுசீலா, நகர மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் வி.தாட்சாயினி, ரா.சரளா, சௌதரா, விமலா ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தலைமை கழக பேச்சாளர் புதுக்கோட்டை விஜயா இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கண்டன உரையாற்றினார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய கழக துணைச் செயலாளர்கள் வாசுகி, சுபரஞ்சனி, நளினி, ஆர்.விஜயலட்சுமி, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் சங்கீதா வேலு, மகாலட்சுமி, ஷோபா, மல்லிகா உள்ளிட்ட 5000க்கும் மேற்பட்ட கழக மகளிர் அணியினர் திரண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

இறுதியாக திருப்பெரும்புதூர் ஒன்றிய குழு துணைத் தலைவர் மாலதி போஸ்கோ நன்றியுரையாற்றினார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (மு) தலைவரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (29.07.2023) செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையத்தின் இறுதிக்கட்ட பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டனர். உடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, மாவட்ட ஆட்சித்தலைவர் ராகுல் நாத்,, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி.உதயா கருணாகரன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

நெல்லை மாவட்டம் பாளையஞ்செட்டி குளம் - ரெட்டியார்பட்டியில்

# கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு! இரா. ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு!

*நெல்லை, ஜூலை 30-*

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் பாளையஞ்செட்டிகுளம் மற்றும் ரெட்டியார்பட்டி ஆகிய இடங்களில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் மகளிர் உரிமை தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாம் நடைபெற்று வருவதை நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டார்.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கூட்டுறவுத் துறையின் மூலம் 643 பயனாளிகளுக்கு ரூ5028 கோடி மதிப்பிலான கடன் உதவிகளை வழங்கினார்.

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடைபெற்ற கடன் உதவிகள் வழங்கும் நிகழ்வில் 643 பயனாளிகளுக்கு ரூபாய் 5028 கோடி மதிப்பிலான கடன் உதவிகளையும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் 32 பயனாளிகளுக்கு ரூபாய் 11.56 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் 10 மாற்றுத்திறனாளி களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களையும் நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மகளிர்கள் தங்கள் சொந்த காலில் நிற்க வேண்டும் என்ற நோக்கில் மகளிர் சுய உதவி குழுவினை ஏற்படுத்தி பல்வேறு கடன் உதவிகளை வழங்கி தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவி குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்களும் பெண்கள் வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும் என்று உயரிய நோக்கில் நகைக்கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவி குழு கடன் உதவிகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மகளிர் கட்டணமில்லா பேருந்து திட்டத்தின் கீழ் மகளிர்கள் நகரப் பேருந்துகளில் எத்தனை முறை வேண்டுமானாலும் இலவசமாக பயணம் மேற்கொண்டு வருவதால் அவர்களின் பணம் சேமிப்பதற்கு இத்திட்டம் ஊன்றுகோலாக அமைகிறது.

நெல்லை மாவட்டத்தில் மொத்தம் குடும்ப அட்டைதாரர்கள் 5,01,877 உள்ளார்கள் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் இதுவரை முதல் கட்டமாக கிராமப்புறங்களில் 528 நியாய விலை கடைகளில் 2,46, 277 குடும்ப அட்டைதாரர்களில் 2,16,025 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டதில் 760 முகாம்கள் மூலம் 1,49,353 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக நகர்புறத்தில் 312 நியாயவிலைக் கடைகளில் உள்ள 2,55,600 குடும்ப அட்டைதாரர்களுக்கு 18 2023முதல்விண்ணப்பங்கள் மற்றும் டோக்கன்கள் வழங்கப்பட உள்ளது.

மகளிர்கள் வாழ்வாதாரத்தில முன்னேற வேண்டும் என அவர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் தொழில் தொடங்குவதற்கான கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி இன்று நெல்லை மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ரூபாய் 20 லட்சத்து மதிப்பில் 25 பயனாளிகளுக்கு உழவர் காசு கடன்களையும் ரூபாய் 13 லட்சம் மதிப்பில் 28 பயனாளிகளுக்கு மத்திய கால கறவை மாட்டுக் கடன்களையும், ரூபாய் 15.86 லட்சம் மதிப்பில் 19 பயனாளிகளுக்கு சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கான கடன்களையும் ரூ.11.20 லட்சம் மதிப்பில் 20 பயனாளிகளுக்கு ஆதிராவிடர் நலத்திட்டத்திற்கான கடன் உதவிகளையும் ரூபாய் 4.20 கோடி மதிப்பில் 35 குழுவினை சார்ந்த சுமார் 520 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன்களையும் ரூபாய் ஒரு லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு மகளிர் தொழில் முனைவோர் கடன் உதவிகளையும் ரூபாய் 5 லட்சம் மதிப்பில் 10 பயனாளிகளுக்கு சிறு வணிக கடன்களையும் ரூபாய் 25000 மதிப்பில் ஒரு பயனாளிக்கு மாற்றுத்திறனாளி கடன் உதவிகளையும், ரூபாய் 50,000 மதிப்பில் ஒரு பயனாளிக்கு கணவனால் கைவிடப்பட்ட கை பெண்கள் ஆதரவற்ற உதவிகள் கடன் உதவிகளையும் ரூபாய் 5 லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு சம்பளக் கடன் உதவியும் ரூபாய் 1 லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு முத்துரா கடன் உதவி என மொத்தம் 643 பயனாளிகளுக்கு ரூபாய் 5028 கோடி மதிப்பிலான கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 32 பயனாளிகளுக்கு 11.56 லட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், மூன்று சக்கர சைக்கிள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும், 10 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் செந்தில்குமார், மாநகராட்சி ஆணையாளர் சிவ கிருஷ்ணமூர்த்தி, துணை மேயர் ராஜ் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ், பாளையங்கோட்டை ஒன்றிய குழு தலைவர் தங்க பாண்டியன் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அழகிரி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் உமா மகேஸ்வரி உள்பட கூட்டுறவு சங்க அலுவலர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில்

# மாணவ - மாணவிகளிடையே கதர் - வைத்தறி ரகங்கள் பிரபலப்படுத்தும் திட்டம்!

## அமைச்சர்கள் சு.முத்துசாமி - ராணிபேட்டை ஆர்.காந்தி துவக்கி வைத்தனர்!

*ஈரோடு, ஜூலை 30 -*

ஈரோடு மாவட்டம், சித்தோடு, ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் (IRTT) (24.07.2023) அன்று கைத்தறித் துறையின் சார்பில் கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே கதர் மற்றும் கைத்தறி ரகங்களை பிரபலப்படுத்தும் திட்டத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ராஜகோபால் சுன்கரா தலைமையில், அரசு முதன்மைச் செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ் துணிநூல் துறை ஆணையர் முனைவர்.மா.வள்ளலார், கைத்தறி துறை ஆணையர் மற்றும் கோ ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு.கே.விவேகானந்தன், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈவெகிச.இளங்கோவன் (ஈரோடுகிழக்கு), ஏ.ஜி.வெங்கடாச்சலம் (அந்தியூர்), ஆகியோர் முன்னிலையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வின் போது, அமைச்சர் சு.முத்துசாமி பேசியதாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் வளர்ச்சிக்காக எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண்களின் நலனுக்காக பிற மாநிலங்கள் பின்பற்றும் வகையில் திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்கள். அதில் குறிப்பாக, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து வசதி, பெண்களின் உயர்கல்வியினை ஊக்குவிக்கும் வகையில் அரசு பள்ளியில் படித்து கல்லூரி செல்லும் மகளிருக்கு மாதம் தலா ரூ.1,000/ வழங்கும் புதுமைப்பெண் திட்டம் உள்ளிட்ட திட்டங்களும், இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக பெண்களின் நலனுக்காக பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 15 அன்று கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/- பெறும் திட்டத்திற்காக விண்ணப்ப படிவங்கள் பெறும் முகாமினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தர்மபுரி மாவட்டத்தில் துவக்கி வைத்ததை தொடர்ந்து தமிழகம் முழுவதும் இம்முகாம் நடைபெற்று வருகிறது. மேலும், கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் ஒரு பகுதியாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நெசவாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் பவானியில் துவக்கி வைக்கப்பட்டது. அதே போன்று பவானி சாலை, அசோகபுரம் பகுதியில் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் புதிய ஸ்டென்டர் இயந்திரத்தின் சேவை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், கைத்தறித்துறை யின் சார்பில் கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே கதர் மற்றும் கைத்தறி ரகங்களை பிரபலப்படுத்தும் திட்டம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. மாணவ, மாணவியர்கள் மற்றும் இன்றயை தலைமுறையினர் அதிக அளவில் கைத்தறி ரகங்களை பயன்படுத்தி நெசவாளர்களின் வாழ்வு மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென தெரிவித்தார்.

இதில் சித்தோடு, அரசு பொறியியல் கல்லூரி, எஸ்.எஸ்.எம், வாசவி, பாரதிதாசன் ஆகிய கல்லூரிகளை சார்ந்த சுமார் 600 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். மேலும் கைத்தறி நெசவாளர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ், மானிய தொகையாக 12 நபர்களுக்கு தலா ரூ.4.00 இலட்சத்திற்கான வீடுகள் கட்டுவதற்கான ஆணையினையும் மற்றும் முத்ரா கடனுதவி திட்டத்தின் கீழ், 11 நபர்களுக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிலான கடனுதவிகளையும் மற்றும் கைத்தறி ரகங்கள் தொடர்பாக கல்லூரி மாணவ, மாணவியர் களிடையே நடைபெற்ற வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும் வழங்கினார்கள். மேலும், கைத்தறி இரகங்களின் பாரம்பரியத்தை பொது மக்களிடையேபிரபலப்படுத்தும் வகையில் கைத்தறி இரகங்கள் காட்சிப்படுத்தப்பட்ட நகர்வு பேருந்தின் சேவையினையும் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

தொடர்ந்து, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பவானி, கூடுதுறை ரோட்டரி ஹால் திருமண மண்டபத்தில், கைத்தறிதுறை மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் நடைபெற்ற நெசவாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமினையும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள், கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டார்கள். மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், ஆஸ்துமா, சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், இதயம் மற்றும் எழும்பு சம்மந்தப்பட்ட நோய்கள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இசிஜி, எக்ஸ்ரோ மற்றும் ஸ்கேன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டடது. இம்முகாமில் 530 ற்க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் திருமதி.நவமண